புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

====================================================================

***பாரதியாரின் ஆன்மீகச் சிந்தனைகள் விநாயகர் நான்மணிமாலையை முன்வைத்து***

====================================================================

***ஆய்வாளர்***

***இரா. காந்திமதி, உதவிப் பேராசிரியர்,***

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*

*கணேசர் கலை அறிவியல் கல்லூரி,*

*மேலைச்சிவபுரி - 622403.*

***(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)***

***ஆய்வு நெறியாளர்,***

***முனைவர் கதி.முருகேசன்,***

*உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,*

*கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி - 622403.*

***(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)***

====================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*இந்திய வரலாற்றில் அரசியல், ஆன்மீகம், தத்துவம் முதலான துறைகளில் பாரதியாரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இறையியலில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பாரதி தான் இயற்றிய பக்திப் பாடல்களில் பொதுநலச் சிந்தனையைப் பதிவு செய்திருக்கிறார். இறை வழிபாட்டில் வழிபடுவர்கள் தமக்கான தேவைகளை வேண்டிப் பெறுவது இயற்கை. ஆனால் பாரதியார் உலக சமுதாயம் முழுமைக்கும் நன்மைகளையும் சமுதாய ஒருமைப்பாட்டையும் முன் வைத்து ஆன்மீகத்தை அணுகியுள்ளார். அவரது ஆழமான ஆன்மீகச் சிந்தனைகளின் வெளிப்பாடாகப் பொது நலம் பேணும் தன்மையாக வழிபாட்டு பாடல்கள் திகழ்கின்றன.*

முன்னுரை

இந்திய நாட்டில் பிறந்த படைப்பாளர்களும் சிறந்த மதிநுட்பமும் சமுதாய நோக்கும் தேசியச் சிந்தனையும் ஆன்மீக எண்ணமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் பாரதியார். அவரது பாடல்கள் தனிப்பட்ட ஒருவரது நலனை முன்னெடுத்துச் செல்லாமல் பொது நிலையிலும், தேசிய அளவிலும், உலகளாவிய நிலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் தன்மையனவாகத் திகழ்கின்றன. குறிப்பாக, பாரதியார் படைத்த தெய்வங்களை வணங்கும் போற்றிப் பாடல்கள் புதிய நோக்கமும் ஆழமான சிந்தனைகளும் பொது நலம் பேணும் நோக்கமும் கொண்டு விளங்குகின்றன. அவ்வகையில் இக்கட்டுரை பாரதியார் படைத்த விநாயகர் நான்மணிமாலையை ஆராய்கிறது.

ஆன்மீகம் விளக்கம்

ஆன்மீகம் இறையியல் சார்ந்த நிகழ்வுகளின் தொகுப்பாக அமைவதாகும். “ஆன்மீகம் அல்லது ஆன்மவியல் (Spirituality) என்பது ஆன்மாவுடன் தொடர்புடைய விடயங்களைக் குறிக்கும். ஆன்மீகத்தைப் பின்பற்றுதல் பயனுள்ள ஒரு செயல்பாடு ஆகும். இது மத நம்பிக்கை ஆழ்நிலை உண்மை என்பது நெருக்கமான ஒரு கருத்து ஆகும். ஆன்மீக விடயங்கள் மனிதத்தின் அனைத்தும் கடந்த இயல்பையும் நோக்கத்தையும் குறிப்பன” (www.google.com ஆன்மீகம்). “மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் அடுத்தவர்களுக்கு நல்லன செய்யாவிடிலும் தீமை செய்யாமல் மனச்சாட்சிக்கு அச்சம் கொண்டு வாழ்வது ஒருவகை ஆன்மீகம்” (மேலது) என்னும் சிந்தனைகள் ஆன்மீகம் நன்மையின் பொருட்டாக உருவான அமைப்பு என்பதைப் புலப்படுத்தும் சான்றுகளாகும்.

நான்மணிமாலை விளக்கம்

தொண்ணூற்று ஆறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. வெண்பா, கலித்துறை, விருத்தப்பா, அகவல்பா என்னும் நான்கு ‘பா’ வகைகள் மாறிமாறி அமைய நாற்பது பாடல்களால் இயற்றப்படுவதாகும். விநாயகர் நான்மணிமாலை, திருவாரூர் நான்மணிமாலை, கோயில் நான்மணிமாலை என்பன இவ்விலக்கிய வகையில் குறிப்பிடத்தக்க நூல்களாகும். விநாயகர் நான்மணிமாலை புதுச்சேரியில் கோயில் கொண்டிருக்கும் மணக்குள விநாயகர் மீது பாடப்பட்டது. “மணக்குள விநாயகர் கோயில் புதுச்சேரியில் அமைந்துள்ளது. இக்கோயில் பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரிக்கு வருவதற்கு முன்பு இருந்து அதாவது 1666-ஆம் ஆண்டுக்கு முன்பே உள்ள ஒரு கோயிலாகும். மணல் குளத்து விநாயகர் என்ற பெயர் மருவி மணக்குள விநாயகர் என்று அறியப்படுகிறது (www.wikipedia.com, De Bruyn, Pippai keith, Anardice David, formmer’s india). பாரதியார் புதுச்சேரியில் தங்கி இருந்த காலத்தில் இத்தலத்தை வணங்கி இந்நூலை இயற்றியுள்ளார். “பாரதியின் இறப்பிற்குப் பின்பு இந்நூல் 1929-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது” (பழ. பழனியப்பன், பருத்தி புடவையாய் காய்க்காத கதை, காலச்சுவடு. 06.07.2010) நூலில் வெண்பா, கட்டளைகளைக் கலித்துறை, ஆசிரியவிருத்தம், அகவல் அமைந்து வர நாற்பது பாடல்கள் உள்ளன. விநாயகர் நான்மணிமாலை தோத்திரப் பா வகை இறைவனை வழிபட்டுப் பாடும் பொருள் அமைப்பினைக் கொண்டது.

காப்புச் செய்யுள்

இலக்கியம் படைப்போர் நூலின் தொடக்கத்தில் தாம் வழிபடும் இறைவனை நூலுக்குத் துணையாக நின்று காத்து நிறைவு செய்தல் வேண்டும் என வேண்டுவது மரபு. பாரதியார் விநாயகர் குறித்துத் தான் பாடும் பாடலுக்கு அவரே காப்பாக வேண்டும் என வேண்டுகிறார்.

சக்தி பெறும் பாவாணர் சாற்றுபொருள் யாதெனினும்

*சித்திபெறச் செய்வாக்கு வல்லமைக்கா அத்தனே*

*நின்றனக்குக் காப்புரைப்பார் நின்மீது செய்யும் நூல்*

*இன்றிதற்கும் காப்பு நீயே"* *(விநாயகர் நான்மணிமாலை. 1)*

*விநாயகர் வழிபாட்டால் பெறும் பலன்கள்*

*மனிதன் ஆசை வழிபட்டவன். இறைவனால் படைக்கப்பட்டவன் எனினும் வாழ்கின்ற காலத்தில் எதிர்கொள்ளும் துன்பங்களின்போதும் வளமான வாழ்க்கை வேண்டுகின்ற போதும் இறைவனிடம் வேண்டியவற்றைக் கேட்பது அவன் வழக்கம். ஆனால் பாரதி விநாயகனை வணங்குவதால் என்னென்ன நன்மைகளைப் பெறலாம் என்பதை நுட்பமாக எடுத்துக்காட்டுகிறார். விநாயகர் வணக்கம் மனிதனின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டு வரும் இயல்புடையது என்பதை உணர்த்துகிறார். "விநாயகனைக் கருத்தில் வைப்பதால் உள்ளே இருக்கின்ற செவி திறக்கும், அகக் கண் ஒளி தரும், அக்கினி தோன்றும், ஆண்மை வலிமை பெறும், செல்கின்ற திசைகளில் எல்லாம் வெற்றி பெறலாம். விடம் நோய் கொடிய பகை ஆகியவற்றை வெல்லலாம் அச்சம் தீரும் உள்ளுக்குள் அமுதம் விளையும் கல்வியும் அறிவும் ஓங்கும்" (மேலது. 4) மனிதனின் உள்ளார்ந்த திறன் வெளிப்பட்டால் அவன் தானாகவே எதனையும் சாதிக்கும் வல்லமை பெறுவான் என்னும் நோக்கில் பாரதி விநாயகர் வணக்கத்தை முன்னிறுத்துகிறார்.*

*வரம் கேட்டல்*

*படைத்தவன் மனிதனின் தேவையை அறிவான் காலத்தால் கொடுக்கவும் எடுக்கவும் செய்வான். ஆனால் மனிதன் வாழ்கின்ற காலத்தில் நல்ல அறிவும் தெளிவான சிந்தனையும் உடையவனாக இருக்க வேண்டும் அப்போதுதான் அவனால் தமக்கும் பிறருக்குமான நல்ல வாழ்க்கையை வாழ முடியும். பாரதியார், எனக்கு வேண்டும் வரங்களை நான் கேட்பேன் மனதில் குழப்பமும் இருளும் தோன்றாமல் மனத்தெளிவை வழங்குதல் வேண்டும்" (மேலது. 7) என விநாயகரிடம் கேட்கிறார்.*

*கடமை யாவன தன்னை கட்டுதல்*

*பிறர்துயர் தீர்த்தல் பிறர் நலம் வேண்டுதல்"* *(மேலது. 8)*

*கடமை எனப்படும் பயனிதில் நான்காம்*

*அறம் பொருள் இன்பம் வீடெனு முறையே"* *(மேலது. 9)*

*எல்லா பயன்களும் தாமே எய்தும்*

*அசையா நெஞ்சம் அருளுவாய்"* *(மேலது. 10)*

*மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்கள் அடக்கம் மனிதனை நல்ல நெறியில் வழி நடத்துவதாகும். அதன் மூலமாக தன்னைச் சார்ந்தவர்களின் துயரத்தைத் தீர்க்க முடியும் பிறருக்கு நன்மைகளை செய்ய முடியும். பிறருக்காக வாழ்வதன் மூலமாகவும் நன்மைகள் செய்வதன் மூலமாகவும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பொருள்களும் வாழ்க்கையில் கிடைக்கும். அதற்குத் துணையாக நிற்பவன் விநாயகன் அவனை வணங்குவதன் காரணமாக எல்லாப் பயன்களும் கிடைக்கும் என்பதைப் பதிவு செய்திருக்கிறார்.*

*மண்ணுலகில் பிறந்த அனைவரும் தனக்கும் பிறருக்கும் பயனுள்ள வாழ்வை மேற்கொள்ள வேண்டும். ஆனால் மனிதனின் வாழ்க்கை, சூழல் என அனைத்தும் எண்ணிய*

எண்ணியாங்கு அமைதல் இல்லை. தனக்கான தேவைகளையும் உலகிற்கான தேவைகளையும் கணபதியிடம் வேண்டும் பாரதி கணபதியின் குண நலன்களை முன் வைத்துத் தனக்கான தேவை என்ன என்பதை உணர்த்துகிறார். விநாயகன், "சொல்லால் புகழ்வதற்கு அரியவன் சூழ்ச்சிக்கு அரியவன் உலகப் பொருள்களில் எல்லாம் நிறைந்தவன் சக்தியின் மைந்தன் ஓம் என்னும் பிரணவப் பொருளை உலகில் நிறுத்தியவன். அத்தகைய விநாயகர் தனக்கு, அனைவருக்கும் எளியவனாகவும் அனைவருக்கும் வலியவனாகவும் அனைவருக்கும் அன்பு மிக்கவனாகவும் அனைவரும் விரும்பும் தன்மை உடையவனாகவும்" (மேலது. 12) வாழ்வதற்கு வழி காட்ட வேண்டும் என்று வேண்டுகிறார்.

விநாயகன் இயல்பு

நிழல் வெயில் தழல் புனல் ஆகியவற்றில் எல்லாம் ஏற்படக்கூடிய துன்பங்களை எல்லாம் விலக்குதல் வேண்டும். வானம் காற்று மண் என எல்லா இடங்களிலும் அச்சம் ஏற்படாமல் காத்தருள்பவன் விநாயகன். மௌனமான வாயும் வேண்டிய வரத்தைத் தருகின்ற கையும் உடைய அவன் உணர்வில் கலந்திருக்கும் இயல்புடையவன். ஒளியாக விளங்குபவன். அவன் தனி முதல் கடவுளாக விளங்குபவன். அவன் முக்திக்கு வித்தாக விளங்கும் இயல்புடையவன். ஏழை மக்களுக்கெல்லாம் இரக்கம் கொண்டு அருள் வழங்கும் பண்புடையவன். மனத்தில் துணையாக இருந்து ஒளி தரும் இயல்புடையவன் என விநாயகனின் இயல்பினைப் பாரதி எடுத்துரைக்கிறார்.

நிழலினும் வெயிலினும் தேர்ந்தநற் துணையாய்த்

தழலினும் புனலினும் அபாயந் தவிர்த்து

மண்ணினும் காற்றினும் வானினும் எனக்குப்

பகைமை யொன்றின்றிப் பயந்தவிர்த் தாள்வான்

உள்ளத் தோங்க நோக்குறும் விழியும்

மௌன வாயும் வரந்தரு கையும்

உடைய நம் பெருமான் உணர்விலே நிற்பான்

ஓமெனும் நிலையில் ஒளியாய்த் திகழ்வான்

ஏழையர்க்கு இரங்கும் பிள்ளை

வாழும் பிள்ளை" (மேலது. 16)

நல்ல மனநிலை பெறுதல்

வலிமையான மனநிலையும் தூய சிந்தனையும் மனிதன் பூவுலகில் வாழ்வதற்கான வழிகள் ஆகும். விநாயகரின் துணை உண்டு என்பதனால் பாரதி அச்சம் இல்லாமல் மனநிலை அமைதியான சூழல் ஆகியன கிடைக்கும் என்பதை உறுதியாக மனதில் எண்ணுகிறார். விநாயகனை வழிபடுவதால் மனதில் அச்ச உணர்வும் ஒடுக்கப்பட்ட மனநிலையும் இயல்பற்ற சூழ்நிலைகளில் வரக்கூடிய நடுக்கமும் தீய செயல்களால் வரக்கூடிய நாணமும் பாவமும் மறைந்து வாழ்கின்ற வாழ்க்கையும் அமைவது கிடையாது. அப்படியே ஏற்பட்டாலும், அவை அனைத்தும் விநாயகரின் அருளால் மாறிவிடும். கடல் பொங்கி எழுந்தாலும் கலங்கும் சூழ்நிலை இருக்காது. யாருக்கும் அஞ்ச வேண்டிய சூழ்நிலை இருக்காது. எதற்கும் அச்சம் கொள்ள வேண்டிய சூழல் இருக்காது. எப்பொழுதும் அஞ்சக்கூடிய சூழல் இருக்காது. மழையும்

*நல்ல ஒளியும் காற்றும் நீரும் மண்ணும் நிலவும் மீன்களும் நல்ல அறிவும் உள்ளன உலகில் வாழ்வதற்கு விநாயகனின் அருளும் உண்டு அவனை வணங்குவதன் காரணமாக நல்ல மனநிலையை பெற்று வாழலாம் என்று குறிப்பிடுகிறார்.*

*அச்சமில்லை அமுங்குதல் இல்லை*

*நடுங்குதல் இல்லை நாணுதல் இல்லை*

*பாவம் இல்லை பதுங்குதல் இல்லை*

*எது நேரிடினும் இடர்ப்பட மாட்டோம்*

*அண்டம் சிதறினால் அஞ்ச மாட்டோம்*

*கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்*

*யாருக்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்*

*எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்*

*வானம் உண்டு மாரி உண்டு*

*ஞாயிறு காற்றும் நல்ல நீரும்*

*தீயும் மண்ணும் திங்களும் மீன்களும்*

*உடலும் அறிவும் உயிரும் உள்ளவே*

*தின்னப்பொருளும் சேர்ந்திடப் பெண்டும்*

*கேட்கப் பாட்டும் காண நல்லுலகும்*

*களித்துரை செய்யக் கணபதி பெயரும்*

*என்று மிங்குளவாம்" (மேலது. 24)*

*பாரதியின் விருப்பம்*

*தான் பெற்ற இன்பமெல்லாம் உலகம் பெற வேண்டும் உலக மக்கள் அனைவரும் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டும் என்னும் உயரிய சிந்தனையைக் கொண்ட பாரதி விநாயகரிடம் கேட்கும் வரங்கள் அனைத்தும் உலகத்தையும் மக்களையும் நோக்கியனவாக அமைந்திருக்கின்றன. "காத்தருள் புரிந்த கடவுளே உலகெல்லாம்" (மேலது. 28) என்று பாரதி விநாயகரிடம் கேட்பது அவரது உயரிய தன்னலம் கருதாத மனநிலைக்குச் சான்றாகும்.*

*பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்*

*கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்*

*மண் மீது உள்ள மக்கள் பறவைகள்*

*விலங்குகள் பூச்சிகள் புல் பூண்டு மரங்கள்*

*யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே*

*இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே*

*செய்தல் வேண்டும் தேவதேவா*

*நானா காசத்து நடுவே நின்று நான்*

*பூ மண்டலத்தில் அன்பும் பொறையும்*

*விளங்குக துன்பமும் மிடிமையும் நோவும்*

*சாவும் நீங்க சார்ந்த பல் உயிர் எல்லாம்*

*இன்பமுற்று வாழ்க என்பேன் இதனை நீ*

*திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி*

*அங்கனமே ஆகுக என்பாய் அய்யனே" (மேலது. 32)*

*இப்பாடல் பகுதியில் பாரதியின் வேண்டுதல் உலக உயிர்களுக்கு எல்லாம் நன்மை பயக்கும் வண்ணம் அமைகிறது. பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன் கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன் என்று கூறும் பாரதி விலங்குகள், பூச்சிகள், புல், பூண்டு, மரங்கள் எல்லாம் என்னுடைய செயலால் துன்பம் தீர்ந்தன அவற்றையெல்லாம் ஒற்றுமையோடு வாழ்வதற்கு நீதான் வழிவகை செய்ய வேண்டும். உலகில் அன்பும் பொறுமையும் நிலவ வேண்டும், துன்பம் விலகிச் செல்ல வேண்டும், வறுமையும் நோயும் சாவும் நீங்கி உலகில் வாழ்கின்ற உயிர்கள் எல்லாம் இன்புற்று வாழ வேண்டும் இதையே நான் உன்னிடம் இப்போது கேட்கிறேன். நீ இதனை எனக்கு அருள வேண்டும் என்று கூறுவது பாரதியின் உயிர் இரக்கப் பண்புக்கு எடுத்துக்காட்டாகும்.*

*நெஞ்சிடம் வேண்டுதல்*

*மனிதனுடைய மனம் அவனுடைய இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணமாக அமைவதால் பாரதி பல இடங்களில் தன்னுடைய சிந்தனையைச் சீர் செய்ய வேண்டும் என்று கூறுவதைக் காண முடிகிறது. இதற்குப் பாரதி சக்திக்கு வைத்த விண்ணப்பம் சான்றாகும்.*

*மோகத்தைக் கொன்றுவிடு*

*அல்லால் என்றன் மூச்சை நிறுத்தி விடு*

*தேகத்தைச் சாய்த்து விடு*

*அல்லால் இதில் சிந்தனை மாய்த்துவிடு"*

*(பாரது. மஹா சந்திக்கு விண்ணப்பம். 1: 1)*

*பந்தத்தை நீக்கிவிடு*

*அல்லால் உயிர் பாரத்தைப் போக்கிவிடு*

*சிந்தை தெளிவாக்கு*

*அல்லால் இதைச் செத்த உடலாக்கு" (மேலது. 2: 112)*

*மனித விடுதலைக்கு மனத்தின் விடுதலை அவசியம் என்பதை உணர்ந்தவர் பாரதி. அதனால் விநாயகர் நான்மணிமாலையில் மனத்தின் உண்மை நிலையினைப் பதிவு செய்திருக்கிறார். "எத்தனை முறை கூறினாலும் மீண்டும் விடுதலை பெற நினைக்க மாட்டாய் துயரத்தில் விழுந்து தவிப்பாய் உன்னை நான் மகிழ்ச்சி அடையச் செய்வேன் எதற்கும் அச்சம் கொள்ள வேண்டாம். உனக்கு நான் கூறியவற்றை நிறைவேற்றுவதற்காகத் தீயில் குதிப்பேன் கடலில் விழுவேன் கொடுமையான விடத்தை உண்பேன் உலகை அழிப்பேன் என்ன செய்தாவது உன்னைத் துன்பமில்லாமல் காப்பேன் உனக்கு நான் பல கோடி முறை சொல்லி விட்டேன் எத்தனை துன்பம் வந்தாலும் நீ அதற்காக அஞ்சாதே எது நிகழ்ந்தாலும் நீ அமைதியாக இருக்க வேண்டும். நாம் இந்த உலகில் தனிப் பொருள் கிடையாது இறைவனுடைய பாதத்தை அடைந்து விட்டால் துன்பங்கள் தொலைந்து போகும் கவலைப்படுவது மட்டுமே பெரிய நரகத்திற்குச் சான்றாகும். எனவே கவலைப்படுவதை விட்டுவிடுவாயாக. இந்த உலகத்தில் அன்பைத் தவிர மிகச் சிறந்த தவம் ஏதும் கிடையாது. அன்புடையவர்கள் இந்த உலகத்தில் நல்வாழ்வு வாழ்வார்கள். எனவே முன் வினைகள் அழிந்து நல்ல வாழ்க்கை பெற நீ விநாயகனைத் துணைக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார்.*

*செய்த தவம் செய்க தவம் நெஞ்சே தவம் செய்தால்*

*எய்த விரும்பியதை எய்தலாம்-வையகத்தில்*

*அன்பில் சிறந்த தவமில்லை அன்புடையார்*

*இன்புற்று வாழ்தல் இயல்பு" (விநாயகர் நான்மணிமாலை. 37)*

*முடிவாக*

*பாரதியார் விநாயகப் பெருமானை வழிபடும் வண்ணம் படைத்தளித்த விநாயகர் நான்மணிமாலை வழிபாட்டுப் பாடலாகத் திகழ்வதோடு மனித சமுதாயம் பெற வேண்டிய ஒற்றுமை, மன உறுதி, நல்லிணக்கம், அச்சமற்ற மனநிலை, உலக சமுதாயம் ஈடேறுவதற்கான வழி ஆகியவற்றை எடுத்துக்காட்டும் நோக்கில் அமைந்திருக்கிறது. பாரதியார் தனக்கான வரங்களை மட்டும் வேண்டிப் பெறாமல் உலக உயிர்கள் அனைத்தும் துன்பமின்றி வாழ வேண்டும். எல்லா உயிர்களுக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்னும் உயர்ந்த சிந்தனையையும் தான் இந்த உலகிற்கு பயன்படும் வண்ணம் வாழ வேண்டும் என்பதையும் பதிவு செய்திருக்கிறார்.*

**துணைநூற் பட்டியல்**


- *பழனியப்பன், பழ. 2010, பருத்தி புடவையாய் காய்க்காத கதை, காலச்சுவடு.*
- *பாரதியார். 1990, பாரதியார் கவிதைகள், சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.*
- *www.wikipedia.com – De Bruyn, Pippai keith, Anardice David, formmer's india (இ. ஆ. ப)*